
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1267

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

73

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

## மொழிப்போரால் நிகழ்ந்த பண்பு மாற்றம்!

நீதிக்கட்சி காலம்தொட்டே இஸ்லாமியர்களுக்கும் திராவிட இயக்கத்திற்குமான நெருக்கம் உருவாகிவிட்டபோதிலும், அந்த நெருக்கத்தை ஆழமாக்கியது, முதல் மொழிப்போர் காலகட்டம்தான். முதல் மொழிப்போரில் இஸ்லாமியர்களின் பங்களிப்பு, சட்டமன்றத்தில் முதன்முதலில் இந்தித் திணிப்புக்கு எதிராக முழங்கிய கலிஃபுல்லாவின் செயல்பாடுகள், இந்தி எதிர்ப்புப் படையில் அவரின் பங்கேற்பு எனப் பல விவரங்களை ஏற்கெனவே விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். எனவே, மொழிப்போருக்கு அப்பாற்பட்டு, முதல் மொழிப்போர் காலத்தில் இஸ்லாமியர்களுக்கும் திராவிட இயக்கத்திற்குமான உறவு எப்படி இருந்தது என்பதை அறிவது அவசியம் என்று கருதுகிறேன்.

அந்தச் சமயங்களில் நடந்த மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் இருதரப்பு உறவாடலைத் துல்லியமாக விளக்குகின்றன. அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் மாநாடுகள்கூட, மதப் பிரசங்கக் கூடங்களாக அல்லாமல், தீர்க்கமான அரசியலைப் பேசியுள்ளன. அந்த மாநாடுகளில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட சுயமரியாதை இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் பங்கெடுத்துள்ளனர்.

06.08.1939 அன்று, பட்டுக்கோட்டையில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாடும், 14.07.1940-இல் ஆம்பூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாடும் அதில் குறிப்பிடத்தக்கவை. இந்த இரண்டு மாநாடுகள் குறித்தும், 'குடிஅரசு' இதழிலேயே பல செய்திகள் பதிவாகி உள்ளன. பெரியார் இரண்டு மாநாட்டிலும் பங்கேற்றுப் பேசியுள்ளார். 'மொழிப்போர்' என்ற அடிப்படையில் மட்டுமல்லாமல், காங்கிரஸ் எதிர்ப்புப் புள்ளியும், திராவிட இயக்கமும் முஸ்லிம்களும் நெருங்கி வர மிக முக்கியக் காரணங்களாக இருந்துள்ளன என்பதை, இவற்றை உற்று நோக்கும்போது தெரியவருகிறது.

கலிஃபுல்லா தலைமையில் நடைபெற்ற பட்டுக்கோட்டை தாலுகா முஸ்லிம் லீக் மாநாட்டைத் திறந்துவைத்தவரே தந்தை பெரியார்தான். முஸ்லிம்கள் மட்டுமில்லாமல், இந்துக்களும் பெருமளவில் திரண்டு, சுமார் 6,000-க்கும் அதிகமானோர் கூடியிருந்தனர். அம்மாநாட்டில் கலிஃபுல்லா பேசும்போது, "ராஜகோபாலச்சாரியாரும், சத்தியமூர்த்தி ஐயரும் செயலற்றுக்கிடக்கும் சமஸ்கிருதத்தைப் புதுப்பிக்க முயல்கிறார்கள். ஒட்டுமொத்த காங்கிரஸ் கட்சியோ, முஸ்லிம்களை இந்தியாவில் இருந்தே ஓட்டிவிட எண்ணுகிறது" என அன்றைய சூழலை விளக்கியதுடன், இந்தித் திணிப்புக்கு எதிரான தனது நிலைப்பாட்டையும் உறுதிபட எடுத்துவைத்தார்.

இந்த மாநாட்டில் தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, பேரறிஞர் அண்ணா, கி.ஆ.பெ.விஸ்வநாதம், என்.ஆர். சாமியப்ப முதலியார் என 'சுயமரியாதை இயக்கம்' மற்றும் 'நீதிக்கட்சி'யைச் சார்ந்த பலரும் உரையாற்றினர். அதைவிட பெரிய சிறப்பு இந்த மாநாட்டிற்கு என்னவென்றால், பட்டுக்கோட்டையில் இருந்து 'தமிழர் தொண்டர் படை' நடைப்பயணமாக வருகை தந்தனர். அவர்களை ஆரத்தழுவி, முஸ்லிம் லீக் தொண்டர் படை வரவேற்றது. பத்திரிகைகளில் பேசுபொருளாகும் அளவுக்கு, அன்றைக்கு இச்சம்பவம் உணர்ச்சிப்பெருக்கான செய்தியாக மாறியது.

### சமமாக உறவாட, கூடி வாழ...

அதேபோல, 14.07.1940 அன்று ஆம்பூரில் ஹாஜி அப்துல் ஷத்தார் இசாக் தலைமையில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டிலும் பெரியார் ஆற்றிய உரை முக்கியமானது. "காங்கிரஸ் பார்ப்பனர்களால் ஏற்பட்டிருக்கும் அரசியல் தொல்லையும் நமது சமூகத்திற்கு வரவிருக்கும் ஆபத்தையும் தடுக்க, நமது ஒப்பற்ற தலைவரும் மகா வீரருமான ஜின்னா இருக்கிறார். பிரிட்டிஷார் இல்லா திருந்தால், நாம் ஜெர்மனியின் கொடுங்கோன் மைக்கு ஆளாகி சில மாதங்கள் ஆகியிருக்கும். அதுபோல ஜின்னா இல்லாதிருந்தால், பார்ப்பனக் கொடுங்கோன்மைக்கு உள்ளாகி, நாம் அமிழ்த்தப்பட்டிருக்கலாம். ஜின்னா அவர்கள் காங்கிரஸை முறியடித்து, அந்த வண்டவாளம் வெளியாகி, முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும், நம்மிலும் தாழ்த்தப்பட்ட ஆதித்தமிழ் மக்களுக்கும் எவ்வளவோ நன்மை ஏற்பட்டது" என்று பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்களுக்கு மத்தியில், ஜின்னாவைப் பெரியார் பாராட்டிப் பேசிய விதம் இஸ்லாமியர்களை ஈர்த்தது.

அதே மாதம் இறுதியில் (29.10.1940) அன்று, விழுப்புரத்தில் நடைபெற்ற தென்னாற்காடு 'முஸ்லிம் லீக் அரசியல் 3-வது மாகாண மாநாட்டை'த் திறந்துவைத்தவரும் பெரியார்தான். அங்கே பேசும்போது, "திராவிட நாட்டில் உள்ள முஸ்லிம்கள் 100-க்கு 90 பேர் திராவிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். திராவிடர்களுடன் சம உரிமை கொண்டாடவும் திராவிடர்களைச் சமமாக நடத்தவும், திராவிடர்களுடன் சமத்துவமாய் கூடி வாழவும், சிறிதும் ஆட்சேபனை இல்லாதவர்களே" என்றார். 'முஸ்லிம்கள் 100-க்கு 50 இடங்களைக் கேட்கிறார்கள், பசுவதையில் ஈடுபடுகிறார்கள்' என்று இந்து மகா சபை கடுமையான விமர்சனங்களைத் தொடங்கிய காலகட்டம் அது. அன்றைக்கு இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இஸ்லாமியர்களுக்கு இப்படியொரு ஆதரவு, வேறெந்தத் தலைவர்களிடத்திலும் வெளிப்படவில்லை. தமிழ்நாட்டில் மட்டும்தான், திராவிட இயக்கத் தலைவர்களிடத்தில் இருந்து மட்டும்தான் வெளிப்பட்டது.




'இந்து மகா சபை'யை ஏவி விடுவதே காங்கிரஸ்தான் என்றெல்லாம் கடும் விமர்சனத்தை, பெரியார் முன்வைத்தார். காங்கிரஸ் மீதான கடுங்கோபத்தில் இருந்த அன்றைய இஸ்லாமிய சமூகத்திடம், அதே பார்வையில் பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் இருக்கிறது என்ற புரிதலை உருவாக்கியது. ஜின்னாவும் பெரியாரும் சமூக விடுதலைக்கான இலக்கில், ஒரே பார்வையில் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தியது. பெரியாரின் இத்தகைய தொடர் பேச்சுகள் இஸ்லாமியர்களுக்கு 'முஸ்லிம் லீக்' என்றவொன்று தமிழ்நாட்டில் தனியாகத் தேவைப்படாது, திராவிட இயக்கம் என்ற ஒன்றுபட்ட படகில் நாமும் பயணிக்க வேண்டுமென்ற உணர்வைத் தந்தது.

இத்தகைய தொடர் பங்கெடுப்புகளின் தொடர்ச்சியாகத்தான் 1947-இல், திருச்சி ரயில்வே ஊழியர் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 'இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து' என்ற புகழ்பெற்ற பெரியாரின் உரை அமைந்தது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகமும் உருவாகிவிட, 'மீலாது நபி' விழாக்களால் இந்த இணைப்பை மேலும் இறுக்கினார் பேரறிஞர் அண்ணா. பெரியார், அண்ணாவின் இத்தகைய செயல்பாடுகள் யாவும் காங்கிரஸில் மிச்சமிருந்த இஸ்லாமியர்களையும் வெளியேறச் செய்து, தி.மு.கழகத்தில் இணையச் செய்தது. இந்தியா முழுக்க முஸ்லிம் லீக்தான் தங்களுக்கான ஒரு வாய்ப்பு என்றிருந்த இஸ்லாமியர்களுக்கு, தமிழ்நாட்டில் மட்டும் தி.மு.க. என்ற மற்றொரு வாய்ப்பு முதன்மையானதாக அமைந்தது. இந்தப் பண்பு மாற்றத்திற்கு பெரும் அடித்தளமிட்டது, மொழிப்போர். அதனையொட்டி, திராவிட இயக்கத்திற்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான உறவு மேலும் உறுதியடைந்தது என்பதை தமிழ்நாட்டு வரலாறு எழுதிவைத்துள்ளது.

> "இந்தியா முழுக்க முஸ்லிம் லீக்தான் தங்களுக்கான ஒரு வாய்ப்பு என்றிருந்த இஸ்லாமியர்களுக்கு, தமிழ்நாட்டில் மட்டும் தி.மு.க. என்ற மற்றொரு வாய்ப்பு முதன்மையானதாக அமைந்தது."

...நீளும்

## STEM படிப்பு : பள்ளிக் கல்வியிலும் ஸ்டிக்கரா?

தமிழ்நாட்டில், இனி அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் சார்ந்த படிப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் கல்வி முறையைக் கடைப்பிடிக்க உள்ளதாகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் கூறியிருக்கிறார். ஏற்கெனவே, தமிழ்நாட்டில் இந்த வகையிலான கல்வியைக் குறிப்பிடும் STEM (Science Technology, Engineering, Mathematics) கல்விமுறையைதான் கழக ஆட்சி ஆலோசித்தது என, சமூக வலைதளங்களில் பலரும் கருத்துகளைப் பகிர்ந்துவருகின்றனர்.

STEM என்பது உலகளவில் பிரபலம். ஏதோ அமெரிக்காவில் மட்டும்தான் இருக்கிறது என நினைத்துக்கொண்டு அமைச்சர் உளறுகிறார். இந்தியா, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் STEM கல்வி தீவிரம். அதனால்தான் இந்தியா, சாஃப்ட்வேர் மற்றும் அறிவியல் துறைகளில் முன்னேறி இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்தியாவில் இப்போதும் உயர்கல்வி மாணவர்களில் 35 விழுக்காடு STEM தேர்ச்சிதான். இந்தியாவில்கூட மிகப்பெரிய பதிப்பாளர்கள் சிலர் STEM புத்தகங்கள் மட்டுமே வெளியிடுகிறார்கள். அவர்கள் STEM பதிப்பாளர்கள் என்றே அறியப்படுவார்கள் எனப் பதிவிட்டுள்ளார், கல்வி ஆலோசகர் ஆர்.ஷாஜகான்.

"குரு வடை மாஸ்டர் மட்டும்தான் வித்தை காட்டணுமா? குருவுக்கு மிஞ்சுற சிஷ்யர்கள் நாங்களும் வித்தை காட்டுவோம்" என்று தமிழ்நாட்டு அமைச்சர்கள் கிளம்பியுள்ளனர் என்றும் பதிவிட்டுள்ளார். அவரது பதிவின்கீழ், கருத்துப் பகிர்ந்துள்ள எழுத்தாளர் ஷோபனா நாராயணன், கடந்த ஆட்சியில், அதே STEAM தொடர்பாகப் பள்ளிக் கல்வித் துறையுடன் திட்டங்கள் துவங்கினோம். கையெழுத்து ஆகும் முன் 'கோட் ஆஃப் கான்டாக்ட்'. அது இப்போது வேறு திருத்தங்களுடன் அறிமுகம் ஆகியிருக்கும் எனக் கூறி இருக்கிறார்.

அதுபோல, கடந்த கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கைப்படி பாடத்திட்ட உருவாக்கக் குழுவில் இருந்த எழுத்தாளர் விழியன் தனது பதிவில், சமீபத்திய பாடப்புத்தகங்களைத் திருப்பிக்கூட பார்க்காமல் என்னென்ன மாற்றங்கள் வேண்டும் எனப் பட்டியலும் அறிவுரைகளும் கொடுக்கிறார்கள்" என்று தன் வருத்தத்தினைப் பகிர்ந்துள்ளார். ஒட்டுமொத்தமாக, கடந்த கழக ஆட்சியில் நாம் உருவாக்கிய திட்டத்துக்குத்தான் தற்போது பெயர் சூட்டுகின்றனர். அதுவும் அலங்கோலமாக என்பதே உண்மை.

## ஃப்ளாஷ்பேக்



கு.பா.ராமஜெயம்



### பெருமை சேர்க்கும் நினைவுகள்!

2002-ஆம் ஆண்டு, என் மகன் கு.ப.பிரியநிதியின் முதல் பிறந்தநாளின் போது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், வீட்டுக்கு வந்து வாழ்த்தியபோது எடுத்த படம். என் கணவர் மறைந்த கு.பாலசுப்ரமணியம் அவர்கள், ஒருங்கிணைந்த விருதுநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகத் திறம்படச் செயல்பட்டவர். தளபதி அவர்கள்தான் எங்கள் திருமணத்தை நடத்திவைத்தார். குழந்தைக்குப் பெயர்சூட்டியதும் அவர்தான். முதலாவது பிறந்தநாளின்போது, விருதுநகர் மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு வந்தவர், எங்கள் இல்லம் வந்து வாழ்த்தினார். தற்போது, நினைவில் எஞ்சியிருக்கும் என் கணவரின் நினைவு நாளில், இந்தப் புகைப்படத்தைப் பகிர்ந்துகொள்வது, அவருக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

– கு.பா.ராமஜெயம், ராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மேயர் - துணை மேயர்!

1959-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை மாநகர மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, 45 தி.மு.க. உறுப்பினர்கள், சென்னை மாமன்றம் சென்றனர். 1930-ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சி மன்றத்தில் மேயர் பொறுப்புக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபுப்படி, நவம்பர் மாதம் வரையுள்ள காலத்துக்கு பிராமணரல்லாத ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதால், தி.மு.க. மேயராக அ.பொ.அரசு, 100-க்கு 59 வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை மேயர் பதவிக்கு நடைபெற்ற போட்டியில், தி.மு.கழகத்தின் சார்பில், பி.சிவசங்கரன் 62 வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900